**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**
**வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்**
**20 மே 2016 / 13 ஷஃபான் 1437**

## <u>சக முஸ்லிம்களுடன் பழகும் முறைகள்</u>

اَلْحَمْدُ للهِ الْغَنِيِّ الْحَمِيْدِ وَأَشْهَدُ أَنْ لَا إِلَهَ إِلاَّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيْكَ لَه، وَهُوَ عَلَى كُلِّ شَيْءٍ شَهِيْد، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُه المَبْعُوثُ بِالرَّحْمَةِ وَالْقَوْلِ السَّدِيْد، اَللّهُمَّ صَلِّ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَصَحْبِهِ وَسَلِّمْ تَسْلِيْمًا كَثِيْرًا. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ اللهِ اتَّقُوْا اللهَ حَقَّ تُقَاتِهِ وَلَا تَمُوْتُنَّ إِلَّا وَأَنْتُمْ مُسْلِمُوْن.

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள அருள்மிக்க ஜமாஅத்தார்களே!

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் அனைத்து கட்டளைகளை நிறைவேற்றுவதன் மூலமாகவும் அவனால் தடைசெய்யப்பட்டுள்ள அனைத்து விஷயங்களிலிருந்து தவிர்ந்து கொள்வதன் மூலமாகவும் அல்லாஹ்வின் மீதான நமது ”தக்வா” (பக்தியை) அதிகரித்து, அவனுடனான நமது உறவைப் பலப்படுத்திக் கொள்வோமாக! அப்போது நாம், சோதனைகள் மற்றும் சவால்கள் நிறைந்த இவ்வுலக வாழ்க்கையில் வாழ்வதற்கான நேர்வழியைப் பெறுவோம். இன்ஷா அல்லாஹ்.

ஜமாஅத்தார்களே!

நாம் தற்போது ஷஃபான் மாதத்தில் இருந்துக் கொண்டிருக்கின்றோம். இந்த மாதத்தில் புனிதமிக்க ரமதான் மாதத்தை எவ்வாறு வரவேற்பது என்றும், ரமதான் மாதத்தில் நமது நேரத்தை எவ்வாறு பயனுள்ள வகையில் செலவழிப்பதென்றும் நாம் திட்டம் தீட்டிக் கொண்டிருக்கலாம். ரமதான் மாதத்தில் நாம் பல புதிய அனுபவங்களை எதிர்கொள்ள நேரிடலாம். உதாரணமாக, ரமதான் மாதத்தில் அமைதியான இரவுப் பொழுதில் அல்லாஹ்வுடன் இருக்க முடிகின்ற இன்பமான அனுபவம்; நமது சகோதர முஸ்லிம்களுடன் இணைந்து அம்மாதத்தின் இரவுப் பொழுதுகளைப் பிரகாசிக்கச் செய்யும் அனுபவம்; தராவீஹ் தொழுகைகளை ஒன்றாக இணைந்து தொழும் அனுபவம்; திருக்குர்ஆனை ஒன்றாக இணைந்து ஓதுவது மற்றும் ஓதக் கேட்பதன் அனுபவம் ஆகியவை அவற்றில் குறிப்பிடத்தக்கவை. உண்மையில், நம்மில் பலர் உற்சாகமடைந் துள்ளதையும், ரமதான் வந்த பின்பு ரமதானை வரவேற்கலாம் என்று காத்திருக்காமல், இப்போதே, அடிக்கடி பின்வரும் பிரார்த்தனையைச் செய்து அதனை வரவேற்றுக் கொண்டிருக்கின்றார்கள் என்பதையும் நான் உறுதியாக நம்புகிறேன்:

اللَّهُمَّ بَارِكْ لَنَا فِي شَهْرِ شَعْبَانَ، وَبَلِّغْنَا رَمَضَانَ

பொருள்: யா அல்லாஹ்! ஷஃபான் மாதத்தில் எங்களுக்கு அருள் புரிவாயாக! ரமதான் மாதத்தை அடையும் பாக்கியத்தை எங்களுக்குத் தருவாயாக!

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள அருள்மிக்க ஜமாஅத்தார்களே!

ரமதான் மாதத்தில் நம்மை எதிர் நோக்கி வரும் மிகச் சிறந்த அனுபவங்களில் ஒன்று, அடியாருக்கும் அவனது இறைவனுக்கும் மத்தியில் ஏற்படும் தொடர்பாகும். இதற்கு அரபில் "ஹப்லும் மினல்லாஹ்" எனப்படுகிறது. அவ்வாறே, அடியாருக்கும் அவரது சக அடியாருக்கும் மத்தியிலும் விஷேசமான தொடர்பு ஏற்படுகிறது. இதற்கு அரபியில் "ஹப்லும் மினன்னாஸ்" எனப்படுகிறது. இத்தொடர்புகளைப் பிரிக்க முடியாது; இவை ஒன்றிணைந்து அமைந்திருப்பது அவசியமாகும்.

எனவே, ஒருவர் தன்னை அல்லாஹ்வின் பக்கம் நெருக்கமாக்கிக் கொள்ளும் நிலையில், சக அடியார்களின் பக்கமும் தன்னை நெருக்கமாக்கிக் கொள்வது அவசியம் என்பதை உணர வேண்டும். அவ்வாறே, இதன் மறுபக்கத்தையும் கவனத்தில் கொள்ள வேண்டும். அதாவது, நாம் மற்றவர்களுடன் நம்மை நெருக்கமாக்கிக் கொள்ளும் போது அல்லாஹ்வின் பக்கமும் நம்மை நெருக்கமாக்கிக் கொள்ள வேண்டும்.

ஜமாஅத்தார்களே!

நமது கடந்த கால அறிஞர்கள் மிகவும் மதிக்கத்தக்க கல்விப் பொக்கிஷங்களை விட்டுச் சென்றுள்ளார்கள். அவற்றில் கருத்துக்கள், முடிவுகள், கொள்கைகள், செயல்முறைகள், உதாரணங்கள் ஆகியவை ஏராளமாகக் காணப்படுகின்றன. இம்மாபெரும் பரம்பரைச் சொத்துக்களின் மூலம், அந்த அறிஞர்கள் ஆர்வத்துடன் இருந்துள்ளார்கள் என்பதும், அவர்களின் காலத்தில் சமுதாயம் எதிர்கொண்ட சவால்கள் மற்றும் சிக்கலானப் பிரச்சனைகளுக்கு - அக்காலத்தில் காணப்பட்ட சந்தர்ப்ப

சூழ்நிலைகளைக் கவனத்தில் கொண்டு - தீர்வு காண்பதற்கு அவர்கள் கடுமையாக ”இஜ்திஹாத்” (முயற்சி) செய்துள்ளார்கள் என்பதும் புலனாகிறது.

மேலும், இப்பரம்பரைச் சொத்தின் மூலம், அவர்களுக்கு மத்தியில் அறிவுப் பரிமாற்றங்கள், நன்னடத்தைகள், கருத்துக்களைப் பகிர்ந்து கொள்வதில் முதிர்ச்சி ஆகியவை மிகப் பெரிய அளவில் இருந்துள்ளதும் புலனாகிறது. அவை அவர்களுக்கு மத்தியில், விவாதத்தின் உயிரோட்டங்கள், அறிவுப் புரட்சிகள், உடலியல் ரீதியிலோ அல்லது ஆன்மீக ரீதியிலோ உறவு மற்றும் நட்பின் கொள்கைகளைப் புறக்கணித்து விடாமல் கருத்துக்களைத் தெரிவித்தல் போன்றவை ஏற்படக் காரணமாக இருந்துள்ளன என்பதும் புலனாகிறது.

கடந்த காலத்தில், அறிஞர்களுக்கு மத்தியில் கருத்துவேறுபாடுகள் காணப்பட்டுள்ளதையும், முக்கிய விஷயங்கள் (இதற்கு அரபியில் ”உசூல்” எனப்படும்), இரண்டாந்தர விஷயங்கள் (இதற்கு அரபியில் ஃபுரூஃ எனப்படும்) ஆகியவற்றில் உயிரோட்டமுள்ள விவாதங்கள் அவர்களுக்கிடையே நடைபெற்றன என்பதையும் மறுக்க முடியாது. எனினும், அவற்றை நாம் நன்கு ஆய்வு செய்து பார்த்தால் அவை அதிகமாக இல்லாமலிருப்பதையும், அவற்றில் காணப்படும் மதி நுட்பமும் விவேகமும் அக்கருத்துவேறுபாடுகளை மிகைத்துள்ளதையும் காணலாம்.

ஒரே நம்பிக்கையைக் கொண்டுள்ள முஸ்லிம்களுக்கு மத்தியில் ஏற்படும் கருத்துவேறுபாடுகளை எதிர்கொள்ளும் போது முதிர்ச்சி காணப்படுவது அவசியமாகும். உணர்ச்சிவசப்படக் கூடாது. அவ்வாறே, அன்பு காணப்பட வேண்டும்; வெறுப்பு ஏற்படக் கூடாது. இச்செயல்முறையை அக்கால

அறிஞர்கள் மிகவும் கவனத்தில் கொண்டு உறுதியாகப் பற்றிப் பிடித்தார்கள். இச்செயல்முறைக்குப் பின்வருமாறு விளக்கமளிக்கலாம்:

العِلْمُ رَحِمٌ بَيْنَ أَهْلِهِ

பொருள்: கல்வியானது, கல்விமான்களுக்கிடையே தொடர்பை ஏற்படுத்துவதாகும். இதற்கு மற்றொரு விளக்கமாக: "கல்வியானது, கல்விமான்கள் ஒருவர் மற்றவருக்கு அருளாக அமைவதற்குக் காரணமாக உள்ளது" என்றும் கூறலாம்.

ஷஃபான் மாதத்தின் எஞ்சியுள்ள நாட்களை, சக முஸ்லிம்களுடன் நாம் எவ்வாறு பழகுகிறோம்; அவர்களுடனான நமது தொடர்பு, குறிப்பாக, சமூக ஊடகங்களில் எவ்வாறு உள்ளது எனச் சிந்திக்கப் பயன்படுத்துவோமாக! வரும் ரமதான் மாதத்துக்கு நம்மை நாம் தயார் செய்து கொள்ளும் வகையில், நம்மிடமிருந்து வெளிப்படும் வார்த்தைகளில் நாம் கவனம் செலுத்துவோமாக! அவதூறு எனும் "தீ" க்கு மேற்கொண்டு விறகு போட்டு அதனைத் தூண்டாமலிருப்பதையும், முஸ்லிம்களுக்கு மத்தியில் பிரிவினைவாதம், கருத்துவேறுபாடுகள் ஏற்படுவதற்குக் காரணமாக நாம் அமையாமலிருப்பதையும் உறுதி செய்வோமாக!

நாம் பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்தவர்களாக இருப்பினும், மாறுபட்ட கருத்துக்களைக் கொண்டவர்களாக இருப்பினும், பல்வேறு மத்ஹபுகளை (வழிமுறைகளை) பின்பற்றுபவர்களாக இருப்பினும் அனைவரும் ஒன்றிணைந்து அமைதியாக வாழும் ஆற்றலைப் பெற்றுள்ளோம் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். இக்கருத்தை, அல்லாஹ் திருக்குர்ஆனின்

”அல்-அன்பியா” எனும் அத்தியாயத்தின் 92-வது வசனத்தில் கூறுவதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்:

إِنَّ هَٰذِهِۦٓ أُمَّتُكُمْ أُمَّةً وَٰحِدَةً وَأَنَا۠ رَبُّكُمْ
فَٱعْبُدُونِ ﴿٩٢﴾

பொருள்: நிச்சயமாக உங்கள் “உம்மத்து” - சமுதாயம் - (வேற்றுமை ஏதுமில்லா) ஒரே சமுதாயம் தான்; (உங்கள் மார்க்கமும் ஒன்று தான்); மேலும் நானே உங்கள் இறைவன். ஆகையால், என்னையே நீங்கள் வணங்குங்கள்.

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள அருள்மிக்க ஜமாஅத்தார்களே!
முஸ்லிம் சமூகத்துக்கு மத்தியில் ஒற்றுமை, ஒருங்கிணைப்பு ஏற்பட வேண்டுமென கடின முயற்சியை மேற்கொள்ளும் தற்கால அறிஞர்களில் ஒருவர் ”ஷைக் அப்துல்லாஹ் பின் பய்யாஹ்” என்பவர் ஆவார். அவர்கள் தனது ”அதபுல் இக்திலா ஃப்” (கருத்துவேறுபாடு கொள்வதன் ஒழுங்கு முறைகள்) எனும் நூலில் பல முக்கிய கருத்துக்களைத் தெரிவித்துள்ளார்கள். சமுதாயத்துக்கிடையே கருத்துவேறுபாடுகளைத் தவிர்ப்பதற்கு அக்கருத்துக்களைப் பற்றிப் பிடிப்பது அவசியமாகும். அக்கருத்துக்களில் சில பின்வருமாறு:

**முதன்முதலாக,** பலவிதமான கருத்துவேறுபாடுகள் காணப்படும் சூழ்நிலைகளில் ஒருவர் மற்றவருடன் பழகும் போது கனிவாகவும்

கருணைச் சிந்தனையுடனும் நடந்து கொள்வது அவசியமாகும். **இரண்டாவதாக**, பிரச்சனையை மிகத் திறமையாகக் கையாளும் அளவுக்கு அவரது அறிவாற்றல் அமைந்திருக்க வேண்டும். **மூன்றாவதாக**, கருத்துகள் "இஜ்திஹாத்" எனப்படும் ஆய்வுகள், முயற்சிகள் செய்யப்படும் நிலையில் இருக்கும் போது அக்கருத்துக்களில் குறை கண்டுபிடிப்பதோ அல்லது அவற்றை மறுப்பதோ கூடாது. **நான்காவதாக**, "இஜ்திஹாத்" செய்யும் அறிஞர்களுக்கு உரிய மரியாதை செய்யப்பட வேண்டும்.

மேற்கண்ட விளக்கங்களின் மூலம் கருத்துவேறுபாடுகளின் ஒழுங்குமுறைகளை சுருக்கமாக நாம் அறியலாம்.

சமயத் தலைவர்களாக உள்ள "அஸாதிதா" ( சன்மார்க்க ஆசிரியர்கள்) சமூகத்தை ஒற்றுமைப்படுத்தும் முயற்சியிலும், குறிப்பாக, சமூக ஊடகங்களிலும் கல்வி சம்பந்தமான விவாதங்களிலும் முன்னிலையில் இருந்தால் அவர்களின் முயற்சிகள் முற்றிலும் போற்றத்தக்கதாக இருக்கும். விவாதங்கள் புரிவது, விமர்சனங்கள் செய்வது, சரிபார்க்கப்படாத, அங்கீகரிக்கப்படாத கருத்துக்களை பகிர்ந்து கொள்வது போன்றவற்றில் பொதுமக்களையும் அறிஞர்கள் உட்படுத்தாமலிருந்தால் மிகவும் நன்றாக இருக்கும். இக்கருத்து, திருக்குர்ஆனின் "ஆலி இம்ரான்" எனும் அத்தியாயத்தின் 103-வது வசனத்தில் அல்லாஹ் கூறும் பின்வரும் வசனத்தை அடிப்படையாகக் கொண்டதாகும்:

وَٱعْتَصِمُوا۟ بِحَبْلِ ٱللَّهِ جَمِيعًا وَلَا تَفَرَّقُوا۟

பொருள்: இன்னும், நீங்கள் எல்லோரும் அல்லாஹ்வின் கயிற்றை வலுவாக பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள்; பிரிந்து விடாதீர்கள்.

மேலும், அல்லாஹ் திருக்குர்ஆனின் ”அல்-அன்ஃபால்” எனும் அத்தியாயத்தின் 46-வது வசனத்தில் கூறுகின்றான்:

وَأَطِيعُوا۟ ٱللَّهَ وَرَسُولَهُۥ وَلَا تَنَٰزَعُوا۟ فَتَفْشَلُوا۟ وَتَذْهَبَ رِيحُكُمْ ۖ وَٱصْبِرُوٓا۟ ۚ
إِنَّ ٱللَّهَ مَعَ ٱلصَّٰبِرِينَ ﴿٤٦﴾

பொருள்: அல்லாஹ்வுக்கும், அவனுடைய தூதருக்கும் கீழ்படியுங்கள் - நீங்கள் கருத்து வேறுபாடு கொள்ளாதீர்கள்; (அவ்வாறு கொண்டால்) கோழைகளாகி விடுவீர்கள்; உங்கள் பலம் குன்றிவிடும்; (துன்பங்களைச் சகித்துக் கொண்டு) நீங்கள் பொறுமையாக இருங்கள் - நிச்சயமாக அல்லாஹ் பொறுமையுடையவர்களுடன் இருக்கின்றான்.

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள அருள்மிக்க ஜமாஅத்தார்களே!
முஸ்லிம், முஸ்லிமல்லாதவர்கள் ஆகிய அனைத்து மனிதர்களுடனும் ஏற்பட வேண்டிய சீரிய உறவுகளைப் பற்றி அல்லாஹ் கூறும் மேற்கண்ட கருத்துக்களை நமக்கு நாம் நினைவூட்டிக் கொள்வதானது, சிங்கப்பூர் முஸ்லிம்கள் இவ்விஷயத்தின் முக்கியத்துவத்தை அறிந்து கொள்ளவில்லை என்பதன் காரணமாக அல்ல; நாம் நமது அன்றாட வாழ்வில் இவற்றைச் செயல்படுத்தவில்லை எனக் கருதியோ

விவாதிக்கப்படவில்லை. இவையெல்லாம், நமக்கு மிகச் சிறந்த அறிவுரை எனும் நோக்கில் விவாதிக்கப்படுகிறது. நமது பாசத்திற்குரிய ரசூலுல்லாஹி(ஸல்) அவர்கள் நவின்ற ஹதீதை தமீம் இப்னு அவ்ஸ் அத்தாரீ (ரலி) பின்வருமாறு அறிவிக்கின்றார்கள்:

"மார்க்கம் என்பது உளப்பூர்வமான உபதேசம் ஆகும்" என நபி(ஸல்) நவின்ற போது: யாருக்கு? என நாங்கள் கேட்டோம். அல்லாஹ், அவனது வேதம், அவனது தூதர், முஸ்லிம்களின் தலைவர்கள் மற்றும் அவர்களின் பொது மக்களுக்கு என நபி(ஸல்) பதில் கூறினார்கள். (ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் முஸ்லிம் ரஹ்)

அல்லாஹ்வின் வழிகாட்டுதலை எப்போதும் பெறுகின்ற, அவற்றைச் செவி சாய்த்து கேட்கின்ற நல்லோர்களில் நின்றும் நாம் ஆகுவோமாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

بَارَكَ اللهُ لِي وَلَكُمْ فِي الْقُرْآنِ الْعَظِيْمِ، وَنَفَعَنِي وَإِيَّاكُمْ بِمَا فِيْهِ مِنَ الآيَاتِ وَالذِّكْرِ الْحَكِيْمِ، وَتَقَبَّلَ مِنِّي وَمِنْكُمْ تِلَاوَتَهُ إِنَّهُ هُوَ السَّمِيْعُ الْعَلِيْمُ، أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ الْعَظِيْمَ لِي وَلَكُمْ، وَلِسَائِرِ الْمُسْلِمِيْنَ وَالْمُسْلِمَاتِ، وَالْمُؤْمِنِيْنَ وَالْمُؤْمِنَاتِ، فَاسْتَغْفِرُوهُ فَيَا فَوْزَ الْمُسْتَغْفِرِيْنَ وَيَا نَجَاةَ التَّائِبِيْنَ.